
அருளோசை

திருவள்ளுவ
ஆண்டு 200
பங்குனி
1975 மார்ச்

5/-/

சமய பாட போதனைத் திங்களிதழ்



மலிவிழாவீதி மடநல்லார் மாமயிலைக்
கலிவிழாக் கண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்
பலிவிழாப் பாடல்செய் பங்குனி உத்திரநாள்
ஒலிவிழாக் காணுதே போதியோ பூம்பாவாய் !

— திருஞானசம்பந்தர்

தமிழ்நாடு தெய்விகப் பேரவை
9, மகாராஜா சூரியராவ் சாலை,
சென்னை-600 018

ச் சந்தா ரூ. 5] [தொலைபேசி : 7682

உ

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி

பழனி ஞானதண்டாயுதபாணியைப் பணிந்திட வாரீர்!
அழகான திருமுருகன் அருள் பெறவே திரண்டு வாரீர்!
செந்தேனும் பாலும் மணக்கும் சேயோனை வழிபட வாரீர்!
சந்தன விபூதி மணக்கும் திருமேனி கண்டு மகிழ வாரீர்!

முடிக்காணிக்கை தரத் தனியிடம்!
தங்குவதற்கேற்ற வசதிகள்!
முதியவரும் முடியாதோரும் முருகன் அருகே செல்ல
இழுவை ரயில் வசதி!
பொங்கியெழும் பேரழகனைத் தாங்கிவரும் தங்கரதம்
காண வசதிகள்!

அத்தனையும் செய்து அழைக்கிறது பழனித் திருக்கோயில். தமிழ்க்கடவுளாம் கந்தப்பெருமானின் அருள் பெற்று, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் கண்காணிப்பில் கீழே கண்ட நிறுவனங்கள் நிர்வகிக்கப்படுகின்றன.

1. அருள்மிகு பழனியாண்டவர் கலைக்கல்லூரி
2. அருள்மிகு பழனியாண்டவர் இந்தியப் பண்பாட்டுக் கல்லூரி
3. அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரி
4. அருள்மிகு பழனியாண்டவர் செந்தமிழ்க் கல்லூரி
5. கார்த்திக்பள்ளி (ஆங்கிலப்போதனை)
6. செவிடர்பள்ளி
7. நாதசுரக் கல்லூரி
8. வேத ஆகமப்பாடசாலை
9. அன்புஇல்லம் (அனைத விடுதி)
10. முதியோர் இல்லம்
11. குழந்தைகள் காப்பகம்
12. மருத்துவமனை

பழனித் திருமலையில் நாளும் பெருகிவரும் பக்தர்கட்குப் போதிய வசதிகள் செய்து தருவதற்காக 60 லட்சரூபாய் செலவில் மாபெரும் திருப்பணித் திட்டம் செயல்பட உள்ளது.

அருளோசை

சமய பாட போதனை திங்களிதழ்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள் நாடு.

மணி 3	ஆனந்த மாசி 1975 மார்ச்	ஓசை 9

அருளோசை அன்பர்களுக்கு, வணக்கம்.

வளங் கொழித்து அனைத்துயிரையும் வாழ்விக்கும் நம் தமிழகம் வறட்சியால் தாழ்வுற்று வருவது அறிந்து நம் சமயத்தவர் அனைவரும் பெரிதும் வருந்துகின்றோம். இந்த இழிநிலை நீங்கி நாம் இன்புற, இயற்கை அருள் சுரக்க இறைவனை இறைஞ்சுவதென்றே நாம் செயற்பாலது. தொன்று தொட்டு, இயற்கை பொய்த்து இன்னல் விளையும் போதெல்லாம் இறைவனைத் தொழுது, இன்னல் தீர்ந்து இன்பங் காண்பது நம் மரபு.

இம்மரபுக் கேற்ப அருட்தந்தை அடிகளார் அவர்களின் அருளாணையின் வண்ணம், இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் உத்தரவின் பேரில் தமிழகமெங்கணும் உள்ள சுமார் 17000 கோயில்களில் மழை வேண்டிச் சிறப்பு வழிபாடுகள் 23-2-75 அன்று நடத்தப் பெற்றன. மற்றும் நம் பேரவையோடிணைந்துள்ள 2500 கிளைச்சங்கங்கங்களிலும் மழை வேண்டிச் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன இவற்றின் பயனாக பல்வேறிடங்களில் மழை பொழிந்துள்ள செய்திகள் நமக்கு மகிழ்ச்சியும் ஊக்கமும் ஊட்டுவனவாயமைந்துள்ளன

இந்த ஊக்கத்தால் ஏற்பட்ட உணர்வின் மிகுதியால் அருட்தந்தை அடிகளார் அவர்களின் அருளாணையின் வண்ணம் சென்னை நகரில் உள்ள தெய்விகச் சங்கங்களின் சார்பில் 23-3-75 ஞாயிறு மாலை 5-30 மணியளவில் சென்னைக் கடற்கரையில் இந்து சமயத்தவர் அனைவரும் லட்சக்கணக்கில் பங்கேற்கும் மாபெரும் வழிபாட்டுக் கூட்டம் ஒன்றைப் பேரவை ஏற்பாடு செய்துள்ளது.

நம் சமய மரபுப்படி இறைவனை இறைஞ்சி நாம் வேண்டுவன யாவும் வேண்டியபடி பெற சமய மக்கள் அனைவரும் அக்கூட்டத்தில் பங்கேற்குமாறு பேரவையின் சார்பில் வேண்டிக் கேட்டுக் கொள்கின்ரேம்.

"மல்குக வேத வேள்வி வழங்குக சுரந்து வானம்
பல்குக வளங்க ளெங்கும் பரவுக அறங்க ளின்பம்
நல்குக வுயிர்கட் கெல்லா நான்மறைச் சைவ மோங்கிப்
புல்குக வுலகமெல்லாம் புரலவன் செங்கோல் வாழ்க."

— திருவிளையாடற்புராணம்

அ. நாராயணசுவாமி, பி.ஏ.,
பதிப்பாசிரியர்.

இந்த இதழில்

கதை, கட்டுரைகளில் வரும் கருத்துக்களுக்கு, அவற்றை எழுதியவர்களே பொறுப்பு.

" அருளோசை "

வினு விடைப் பகுதி-பிப்ரவரி-75

பரிசு பெற்றவர்கள்

முதல் பரிசு :	சேலம் அருவி, பொம்மியப்பட்டி (அஞ்சல்) சேலம் மாவட்டம், சந்தா எண். 3222
இரண்டாம் பரிசு :	மு. பிச்சை ப. கொடிக்குளம் (அஞ்சல்), இராம நாதபுரம், சந்தா எண் 3589
மூன்ரும் பரிசு :	கே. செல்ல முத்து, பொன்னம்மா பேட்டை சேலம்-1.
நான்காம் பரிசு :	வி. ராம்குமார், நடராஜ பிள்ளை சாவடி. (அஞ்சல்) தஞ்சை மாவட்டம்

5|-1

உ
சிவமயம்

திருவருட்பயன் ஆராய்ச்சி

சீலத்திரு. ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

பெருக்க நுகர்வினை பேரொளியா யெங்கு
மருக்கனென நிற்கு மருள் 33

என்பதில் பெருக்க நுகர என்று எச்சவினையாக நிற்றலை யுணராது பாடத்தைப் பிழைபடக் கொண்டு பல பதிப்புக்கள் நிலவுகின்றன. நிரம்பவழகிய தேசிகர் பெருக்க—ஈட்டவும் (புண்ணிய பாவங்களை) வளர்க்கவும், நுகர—துய்க்கவும் (சுக துக்கங்களை) அருந்தவும் எனச் சூரியனுக்கும் அருளுக்கும் ஏற்பப் பொருள் கூறியது உணர்க. "வினை—பெருக்குங்கால் புண்ணிய பாவங்கள், நுகருங்கால் சுக துக்கங்கள்" என்றதும் அறிக. அதனால், 'நுகரவினை' என்றதே பிழையிலாதது.

ஊனறியா தொன்று முயிரறியா தொன்றுமிது
தானறியா தாரறிவார் தான், 33

என்னுந் திருவெண்பாவாவில் ஒன்றுதான் பிழை. அதிலுங் காலேதான். சொற்போக்கை நோக்கினும் தெளிவாகப் புலப்படும். "அசேதனங்களாகிய தத்துவங்கட்கு ஏஞ்ஞான்றும் அறிவுண்டாவதில்லை" என்ற (நி. அ. தே) உரையை உற்றுணர்ந்தால் 'ஊனறியாதென்றும்' என்றே இருத்தல் வேண்டும். ஊன் என்றும் அறியாது. உயிர் ஒன்றும் அறியாது. அறிந்து அறிவித்து நிற்கும் அருளின்றேல் அறிவார் எவர்? ஊனறியாதென்றும், உயிரறியாதென்றும், இவைதான் (அருள்) அறியாது, ஆர்தான் அறிவார்? என்ற சொற்றொடர்ப்போக்குப் பொருளுக்கும் ஆர்தானறிவார்? எல்லாம் அத் திருவருளே அறியும்.

வெள்ளத்துள் நாவற்றி யெங்கும் விடிந்திருளாங்
கள்ளத் திறைவர் கடன்.

என்பதில் உவமவுருபாகிய ஆங்கு என்பது, தமிழ் நூல்களுள் எங்கும் காண்கின்றதால் எங்கும் என்ருயிற்றுப்போலும். எங்கும் என்ற பாடத்தால், அத்திருப்பாட்டுரை அமைந்திருக்கும் நிலையை அறிஞர் சிறிது கடைக்கண்ணால் நோக்கினராயின், பெரிது வருந்துவர். நிரம்பவழகிய தேசிகருரை 'எவ்விடத்தும்' என்றிருத்தலால் அவர்க்கு 'எங்கும்' என்ற பாடமே இருந்தது எனல் விளங்கும். அது "பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டாங்கு" என்பதிற்போன்றுவந்த வினையுவமம். தலைவர் என்றதும் பாடம்.

" அன்ன ஆங்கு மான விறப்ப
வென்ன உறழத் தகையநோக்கொடு
கன்னிய வெட்டும் வினைப்பா லுவமம் "

என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தை நோக்குக.

இத்திருவருட் பயனில் வந்த அவ்வுவமம் திருவாசகத்துள் அவ்வடிவிலேயே இருந்த பெற்றியை யெண்ணி, ஆசிரியரால் அமைந்து கொண்டமையால் அதன் உண்மை வடிவம் வேறு படற்கு இடனில்லை.

வெள்ளத்துள் நாவற்றி யாங்குன் அருள்பெற்றுத் துன்பத்
விள்ளக்கிலேனை விடுதிகண்டாய்" [தின்றும்

என்னும் (நீத்தல் விண்ணப்பம்-15) மணிமொழியைக் காண்க.

வெள்ளத்துள் நின்றும் அதைப் பருகாது நாவற்றியது போல விடிந்தும் இருளாம் எனச் செம்பொருள் கொள்ளல் வேண்டும்; உயிர்க் குறையேயன்றி அருட்குறை அன்று என்று உணர்த்துங் குறளாதலின், நறுநீர் வெள்ளத்திலும் உண்டாகும் நாவறட்சியும் அருளின் தெருட்சியிலும் உண்டாகும் உயிர் மருட்சியும் ஒன்றே. வேறல்ல எனக் குறித்துக் காட்டி அறியாமையுள் இருக்கும் கள்ளத்திறைவரும் தற்கேடருமான உயிரார் குறைவையும் எங்கும் பேரொளியாய் அருக்கனென நிற்கும் அருளார் நிறைவையும் உணர்த்தும் அழகை உணர்க.

உ

தமிழ்நாடு தெய்விகப் பேரவை

மாநில மாநாடு அறிவிப்பு

குமரி மாவட்டத்தில் மே மாதம் 10, 11 தேதிகளில் நடைபெற இருக்கும் நமது பேரவை மாநில மாநாட்டுக்கு கிளைச்சங்கங்கள் தங்கள் பேராளர்களைத் தேர்ந்தெடுத்தல், தீர்மானங்கள் நிறைவேற்றல் ஆகிய பணிகளை விரைந்து மேற்கொண்டு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம். நம் சமய வலிமையையும், சமயத்தவர் உணர்வையும் எடுத்துக்காட்ட ஓர் நல்வாய்ப்பென்று கருதி மாநில மாநாட்டுக்கு அணிதிரண்டு நம் சமயத்திற்கு அணி செய்யுமாறு வேண்டுகின்றோம். நன்றி.

— செயலாளர்.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

நம்பியாண்டார் நம்பி - கலித்துறைத் திருவந்தாதி

(குன்றக்குடி ஸ்ரீ ஆறுமுகத்தம்பிரான் பதவுரையுடன்)

பிரதி செய்தவர்: சேக்கிழார்தாசன்

துதிகவி

பொன்னி வடகரை சேர்நாரை யூரிற் புழைக்கைமுக
மன்ன னறுபத்து மூவர் பதிதே மரபுசெயல்
பன்னவத் தொண்டத் தொகைவகை பல்குமந் தாதிதனைச்
சொன்ன மறைக்குல நம்பிபொற் பாதத் துணைதுணையே.

(இ-ள்): காவிரியின் வடகரையிலுள்ள திருநாரையூரில் வீற்றிருந்தருளும்; யானை முகத்தையுடைய பொல்லாப் பிள்ளையார்; அறுபத்து மூன்று நாயன்மார்களுடைய ஊரையும் தேசத்தையும் குலத்தையும் திருத்தொண்டையும் அருளிச் செய்ய; சிவபிரான் அடியெடுத்துக் கொடுக்க நம்பியாரூரர் பாடியருளும் அச்சிறப்பினையுடைய திருத்தொண்டத் தொகைக்கு வகையாக விளங்கும் இக்கலித்துறைத் திருவந்தாதியை; பாடியருளிய மறையவர் குலத்து அவதரித்த நம்பியாண்டார் நம்பியினது; அழகிய இரண்டு திருவடிகளும் எமக்குப் பிறவி நோயை நீக்குதற்குத் துணையாம். (எ-று). ஏ-அசை.

தில்லைவாழந்தணர்

செப்பத் தகுபுகழ்த் தில்லைப் பதியிற் செழுமறையோ
ரொப்பப் புவனங்கண் மூன்றினு மும்பரி னூரெரித்த
அப்பர்க் கமுதத் திருநடர்க் கந்திப் பிறையணிந்த
துப்பர்க் குரிமைத் தொழில்புரி வோர்தமைச் சொல்லுதுமே. 1.

(இ-ள்): யாவரும் எடுத்துக் கூறும் கீர்த்தியை யுடைய தில்லையின் கண் வாழும் செப்பமான மறையவர்களாகிய; மூவுலகத்தாரும் கொண்டாடும் படி; விண்ணின்கண் சஞ்சரிக்கும் முப்புரத்தையும் எரித்தருளிய முதல்வரும்; ஆனந்த நிருத்தம் செய்தருள்வாரும் ஆகிய; மாலைக் காலத்துதிக்கும் இளம்பிறையைத் திருமுடியிற் சூடிய பவள வண்ணத்தையுடைய சிவபிரானுக்கு; உரிமைத் தொண்டைச் செய்யும் தில்லை மூவாயிரவரையும் யாம் நாவால் நாள்தோறும் வழுத்துதும். (எ-று). ஏ-அசை.

திருநீலகண்ட நாயனர்

சொல்லச் சிவன்திரு வாணைதன் றூமொழி தோணசையால்
ஒல்லைத் துறந்துரு மூத்ததற் பின்னுமை கோனருளால்
வில்லைப் புரைநுத லாளோ டிளமைபெற் றின்பமிக்கான்
றில்லைத் திருநீல கண்டக் குயவனுஞ் செய்தவனே. 2.

(இ-ள்): தன் மனைவியார் தோளைத் தான் விரும்பினமையால் சிவபிரான் திருவாணையை அவர் எடுத்துக்கூற; விரைவாக அம்மனையாளின்பத்தையுந் துறந்து உடம்பு மூப்படைந்த பின்பு - சிவபிரான் திருவருளினால்; விற்போலும் நெற்றியையுடைய அம்மனையாளோடு சிவபதத்தில் என்றும் நீங்கா இளமையை அடைந்து இன்பமுற்றவர் யாவரெனில்; திருத்தில்லைக்கண் அவதரித்த திருநீலகண்டக் குயவரென்னும் தவமுடையோர். (எ-று). ஏ-அசை.

இயற்பகை நாயனார்

செய்தவர் வேண்டிய தியாதுங் கொடுப்பச் சிவன்றவனாய்ச்
கைதவம் பேசிநின் க்ாதலி யைத்தரு கென்றலுமே
மைதிகழ் கண்ணியை யீந்தவன் வாய்ந்த பெரும்புகழ்வந்
தெய்திய காவிரிப் பூம்பட் டினத்து ளியற்பகையே. 3.

(இ-ள்): சிவனடியார்கள் விரும்பிய பொருள்கள் யாதேனும் மருது கொடுத்திருக்குங் காலத்து; சிவபிரான் ஓர் அடியரராய் வேடங் கொண்டு வஞ்சமாற்றங்கூறி; உன் மனையாளைக் கொடு என்று கேட்கவும்; தன் மனையாளைக் கொடுத்தவன் யாரெனில்; வாய்ப்பான பெரிய புகழடையப் பெற்ற; காவிரிப்பூம்பட்டினத்துள் வாழ்ந்த இயற்பகை நாயனார். (எ-று). ஏ- இரண்டும் அசை.

தருக என்றது தருகென ஈறு குறைந்து நின்றது.

இளையான்குடிமாற நாயனார்

இயலா விடைச்சென்ற மாதவர்க் கின்னமு தாவிதைத்த
வயலார் முளைவித் துவாரி மனையலக் கால்வறுத்துச்
செயலார் பயிர்விழுத் தீங்கறி யாக்கு மவன்செழுநீர்க்
கயலா ரிளையான் குடியுடை மாறனெங் கற்பகமே. 4.

(இ-ள்): வறுமையுற்ற காலத்துத் தம்மிடத்து உணவு விரும்பி வந்த அடியாருக்கு; இனிய திருவமுதாக வயலில் பகல் விதைத்த நாற்று விரையை வாரிக்கொண்டு வந்து; தம்மனையிலுள்ள வரிச்சினால் தீயுண்டாக்கி வறுத்து; தொழிலமைந்த புன்செய்ப் பயிர்களை மேலான மதுரமுள்ள கறியாகச் சமைத்தவர் யாரெனில்; செழுமையான நீரின்கண் கயல்மீன்கள் வாழும் இளையான்குடி என்னும் ஊரையுடைய மாறநாயனார் என்னும் எனக்குக் கற்பகம் போல்வார். (எ-று). ஏ-அசை.

மெய்ப்பொருணாயனார்

கற்றநன் மெய்த்தவன் போலொரு பொய்த்தவன் காய்சினத்தாற்
செற்றவன் றன்னை யவனைச் செறப்புக லிந்திருவாய்
மற்றவன் றத்தா நமரே யெனச்சொல்லி வானுலகம்
பெற்றவன் சேதிபன் மெய்ப்பொரு ளாமென்று பேசுவரே. 5.

(இ-ள்): வீட்டுநூலை ஓதிய நல்ல மெய்த்தவனைப் போல ஒரு பொய் வேடமுடையனாய்; கடிய கோபத்தால் தன்னைக் கொன்ற; அம்முத்தநாதனை (வாயிலாளன்) கொல்லப்புகுங்கால்; திருவாயினால் அப்பொய் வேடமுடையானைத் தத்தனே நமரென்று கூறி; சிவபதத்தை யடைந்தவர் யாரெனில்; சேதிநாட்டுக்கரசராகிய; மெய்ப்பொருணாயனாரென்று அறிஞர் கூறுவர். (எ-று). ஏ-அசை.

(தொடரும்)

சமயபோதனை

பாடம் 12 | வினக்கள் | மார்ச்சு 1975

வினக்கள்

வினக்கள் இந்த இதழ்க் கட்டுரைகள் பற்றியனவே ஆகும். விடைகளை முழு அளவு (Foolscape size) இரண்டு தனித் தாள்களில் நான்கு பக்கத்திற்குள் எழுதி இச்செயலகத்திற்கு 31-3-1975க்குள் கிடைக்கும்படி அனுப்பிவைக்கவேண்டும். சந்தா எண், பெயர், வயது, முகவரி இவற்றைத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

மதிப்பெண் சமம்] [மதிப்பெண் 100

1. அப்பரடிகள் காட்டிய ஆமை உவமைக்கும், சமணர் காட்டிய ஆமை உவமைக்கும் உள்ள வேறுபாட்டினை விளக்குக.
2. நம்பியாண்டார் நம்பிகள் கூற்றுகளின்படி நீலகண்ட நாயனர் இயற்பகை நாயனர், இளையான்குடி மாற நாயனர் ஆகியோரின் வரலாறுகளை எழுதுக?
3. "பெருக்க நுகர்வினை பேரொளியா யெங்கு மருக்கனென நிற்கு மருள்" என்பதன் பாட பேதங்களையும், பொருளையும் விளக்குக?
4. இராமநுசர் ஐம்பத்திரண்டு முதலிகளை நியமித்துத் திரு நாராயணன் திருத்தொண்டு சிறப்பாக நடைபெறும்படி ஏற்பாடு செய்தமையை விளக்குக.
5. தண்டியடிகளின் திருத்தொண்டுகளைக் கண்டு, அமணர் வீசிய கடுமொழிகளுக்கு அடிகள் தந்த மறுமொழிகளின் சிறப்பை விளக்குக.
6. சுந்தரர் தம்பிரான் தோழரான தன்மையை விளக்குக.
7. அறிவு வாயில்களாகிய புலனைந்தைப் பற்றியும் அவற்றை அடக்கு மாற்றையும் அப்பரடிகள் எவ்வாறு விளக்குகின்றார்?
8. "வெள்ளத்துள் நாவற்றி யாங்குன் அருள் பெற்றுத் துன்பத் தின்றும், விள்ளக்கிலேனை விடுதி கண்டாய்" — விளக்குக.
9. ஆழ்வானுக்கு நேர்ந்த ஆபத்தைக் கேட்டவுடனே இராமநுசர் செய்தவற்றைக் கூறுக.
10. தோல்வியுற்ற சமணர்கள் என்ன செய்தனர்?

விடைகளை எழுதி உரிய அஞ்சல்தலை யொட்டிக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவேண்டும்:—

"அருளோசை"

தமிழ்நாடு தெய்விகப் பேரவை,

9, மகாராஜா சூரியராவ் சாலை,

ஆள்வார்பேட்டை,

சென்னை-600018.

STATEMENT ABOUT OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT ARULOSAI

FORM IV (See Rule 8)

1. Place of Publication	9, Maharaja Surya Rao Road, Madras-600018
2. Periodicity of its Publication	Monthly
3. Printer's Name	A. Narayanaswami, B.A.
(Whether citizen of India)	Yes
(if foreigner, state the country of origin)	……
4. Publisher's Name	A. Narayanaswami, B.A.
(Whether citizen of India)	Yes
(if foreigner, state the country of origin)	……
Address	9, Maharaja Surya Rao Road Madras-600018
5. Editor's Name	A. Narayanaswami, B.A.
(Whether citizen of India)	Yes
(if foreigner, state the country of origin)	……
Address	9, Maharaja Surya Rao Road Madras-600018
Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital	Tamil Nadu Deivika Peravai 9, Maharaja Surya Rao Road Madras-600018

I, A. Narayanaswami hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date 15—3—75

A. Narayanaswami, B.A.
Publisher.

இராமாநுசர்

பேராசிரியர் திரு. கா. அ. மணவாளன், எம்.ஏ., பி.ஓ.எல்

(20)

இராமநுசர் திருநாராயணபுரம் என்னும் மேல்கோட்டையில் செல்வ நாராயணனுக்குப் பல விழாக்களைச் செய்து வந்தார். சீடர்களுக்கு வேதாந்த விளக்கங்களையும், ஆழ்வார்களின் அருமறைப் பொருள்களையும் உபதேசித்து வந்தார். அப்பொழுது திருவரங்கத்திலிருந்து ஒரு வைணவர் தலயாத்திரையாக மேல்கோட்டைக்கு வந்து சேர்ந்தார். அவர் இராமாநுசருடைய திருவடிகளில் வணங்கி நின்றார். இராமாநுசரும் திருவரங்கத்துச் செய்திகளையும், குறிப்பாகக் கூரத்தாழ்வானைப் பற்றியும் அவரிடம் கேட்டார். வந்த வைணவரும் கண்களில் நீர்மல்கச் சோழ அரசனால் கூரத்தாழ்வானுக்கு நேர்ந்த ஆபத்தைப் பற்றிக் கூறினார். கண்களை இழந்த நிலையிலும், ஆசாரியராகிய தேவரீரைப் பற்றியே எப்பொழுதும் நினைத்துக் கொண்டும், சீடர்களிடம் சொல்லிக் கொண்டும் இருக்கிறார் என்று கூறினார்.

ஆழ்வானுக்கு நேர்ந்த ஆபத்தைக் கேட்டவுடனே இராமாநுசர் மூர்ச்சித்து வீழ்ந்தார். உடனிருந்த சீடர்கள் தேற்றத் தேறினார். ஸ்ரீ வைஷ்ணவ தர்சனத்திற்கு இப்படியும் ஒரு சோதனையா? என்று கேட்டார். உடனே கூரத்தாழ்வானைக் காணவேண்டும் என்று ஆசைப் பட்டார். எனினும் திருநாராயணபுரத்தில் இன்னும் சில சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்று கருதியதால் புறப்பட முடியவில்லை. தம்முடைய சீடர்களில் மிகவும் அறிவாளியான மாறொன்றில்லா மாருதிச் சிறியாண்டானை அழைத்து "நீர் போய் கூரத்தாழ்வானுடைய நிலையை அறிந்து வாரும்" என்று திருவரங்கத்திற்கு அனுப்பினார்.

மாறொன்றில்லா மாருதிச் சிறியாண்டானும் விரைந்து சென்று திருவரங்கத்தை அடைந்தார். 'அடியேன் இராமாநுசதாசன்' என்று சொல்லிக் கொண்டே ஆழ்வான் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். ஆழ்வானும் குரல் வழியாகவே மாருதிச் சிறியாண்டானைத் தெரிந்து கொண்டார். இராமாநுசரைப் பற்றி அன்போடும் பக்தியோடும் கேட்டார். மாருதிச்சிறியாண்டானும் மேற்கேயும் நம்முடைய சித்தாந்தம் சிறப்பாக வளர்ந்து வருகிறது. ஆனால் தேவரீருக்கு இப்படி துன்பம் நேர்ந்து விட்டதே என்றுதான் இராமாநுசர் கண் கலங்கி நிற்கிறார்

என்றார். அதற்கு ஆழ்வான் என் கண்கள் போனாலென்ன இவ்வுலகுக்கு இராமாநுசர் உபதேசம் கிடைத்தால் போதும். அவருக்கு ஓராபத்தும் வந்துவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். நான் மகிழ்ச்சியுடனிருப்பதாகவே இராமாநுசரிடம் தெரிவிக்கவும் என்று வேண்டினார்.

மாருதிச் சிறியாண்டானும் ஆழ்வானிடம் விடைபெற்றுக் கொண்டு அரங்கனையும் வணங்கி விட்டு மேல்கோட்டைக்குப் புறப்பட்டார். அப்பொழுது சிலர், ஆழ்வான் கண்களைப் பறித்த சோழ அரசன் கழுத்தில் புண்கண்டு புழுத்து இறந்தான் என்ற செய்தியை எதிரில் கூறி வந்தனர். மாருதிச்சிறியாண்டான் மிகவும் மகிழ்ந்து செய்தி உண்மைதானா என்பதை அறிந்துவரத் தானே கங்கைகொண்ட சோழபுரம் சென்றார். சோழன் கிருமி கண்டு இறந்தான் என்ற செய்தி உறுதிப்பட்டது.

பின்பு சில நாட்களில் மாருதிச்சிறியாண்டான் மேல்கோட்டையை அடைந்து இராமாநுசரிடம் ஆழ்வானைப் பற்றியும் ஆழ்வானுக்குக் கொடுமை செய்த அரசன் முடிவைப்பற்றியும் கூறினார். உடனே இராமாநுசர் ஆழ்வானைக் காணவேண்டுமென்ற துடிப்பாலும், அரச பயமில்லாமையாலும் விரைவில் திருவரங்கம் செல்லத் திட்டமிட்டார். கோயிலுக்குச் சென்று திருநாராயணப் பெருமானை வணங்கித், தான், திருவரங்கம் செல்ல வேண்டியிருப்பதை விண்ணப்பம் செய்தார். அருமையாகத் தன்னுடைய மகனைப் போலவே வளர்த்து வந்த செல்வப்பிள்ளையை எப்படிப் பிரிவது என்று ஏங்கி நின்றார்.

இராமாநுசர் திருவரங்கம் செல்லப் போகிறார் என்ற செய்தி பரவியவுடனே மேல்கோட்டை வாசிகளான அருமைச் சீடர்கள் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்து விட்டனர். தங்கள் குருவைப் பிரிந்து எப்படி வாழ்வது என்று சிந்தித்தனர். பின்பு ஆசாரியராகிய இராமாநுசருடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கி "சுவாமி, உங்களைப் பிரிந்து நாங்கள் எப்படி வாழ்வோம்" என்று கேட்டனர். இராமாநுசரும் அவர்களுக்கு ஆறுதல் கூறினார். தம்மைப் போல ஒரு விக்ரகத்தை உருவாக்கினார். அவ்வுருவத்தில் தன் சக்தியை ஏற்றி மந்திர பூர்வமாகப் பிரதிஷ்டை செய்து கொடுத்தார்.

அங்குள்ள சீடர்களில் முக்கியமான ஐம்பத்திரண்டு பேர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குச் சில கட்டளைகளைச் செய்து வருமாறு பணித்தார். தாம் அரும்பாடுபட்டு டில்லியிலிருந்து எழுந்தருளப் பண்ணி வந்த செல்வப் பிள்ளையை அவர்களுக்குக் காட்டி 'இவரை மிகவும் பக்தியோடு பூசை செய்து வருவதுடன், திருநாராயணப் பெருமாளுக்குத் தான் நடத்தி வந்த விழாக்களையும் நன்கு நடத்தி வருமாறு கூறினார். மேலும் தான் இதுவரை கூறிவந்த பிரம்ம சூத்திர உரையாகிய ஸ்ரீ பாஷ்யத்தைத் தவறாமல் பயில மேண்டுமென்றும், அப்படி அதைப் படிக்க முடியாதவர் நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழியையும், அதன் உரைவளங்களையும் போற்றியுரைக்க வேண்டுமென்றும் பணித்

தார். அதையும் செய்ய இயலாதவர் புனிதமான இந்த யதுகிரியில் ஒரு குடிசையாவது அமைத்துக் கொண்டு திருநாராயணனுக்குத் தொண்டு செய்து வாழுங்கள் என்று இறுதியாகக் கூறினர்.

இவ்விதம் ஐம்பத்திரண்டு முதலிகளை நியமித்துத் திருநாராயணன் திருத்தொண்டு சிறப்பாக நடைபெறும்படி ஏற்பாடு செய்தார். பின்பு திருவரங்கச் சீடர்களுடன் மேல் நாடாகிய திருநாராயண புரத்திலிருந்து பெருமாளிடம் விடைபெற்றுக் கொண்டு திருவரங்கத்திற்குப் புறப்பட்டார்.

திருவரங்கத்தை வந்தடைந்த இராமானுசர் சீடர்களுடன் காவிரியில் நீராடி அனுட்டானங்களை முடித்துக் கொண்டார். அரவரசனுகிய ஆதி சேடனின் மேல் பள்ளிகொண்டிருக்கும், கருமணியாகிய அழகிய மணவாளப் பெருமானை அகம் குளிரக் கண்டு வணங்குவதற்காகக் கோயிலுக்குச் சென்றார். கோயிற் பணியாளர்கள் இராமானுசரை எதிர் கொண்டழைத்துச் சென்றனர். இராமானுசரும் கோயிலுக்குள் சென்று திருமணத்தூணைப் பற்றி நின்று, திருவடியிலிருந்து திருமுடிவரை சேவித்து, வணங்கி நின்றார். ஆழ்வானுக்கு நேர்ந்த துன்பத்தைப் பற்றியும் பெருமாளிடம் வேண்டிக் கொண்டார். உடனே கண்ணீரைத் துடைத்துக் கொண்டு பரிவாரங்கள் சூழ, கூரத்தாழ்வான் திருமாளிகைக்கு எழுந்தருளினர்.

ஆழ்வானும் ஆசாரியருடைய வருகையைச் சீடர்களால் அறிந்து, வாசலில் வந்து வரவேற்கக் காத்திருந்தார். இராமானுசரும் ஆழ்வான் திருமாளிகை வாசலிலிருப்பதை அறிந்து வேகமாக வந்து அணைத்துக் கொண்டார். ஆழ்வானும் ஆசாரியருடைய திருமேனி சம்பந்தத்தால் மிகவும் மகிழ்ந்து வணங்கினர். கண்களை இழந்து நிற்கும் ஆழ்வானைக் கண்ட இராமானுசருடைய கண்கள் கலங்கிக் குளமாயின. என்னால் உமக்கு இப்படி நேர்ந்துவிட்டதே என்று மிகவும் வருந்திக் கூறினர். அதைக்கேட்ட ஆழ்வான் ஆசாரியருக்காகவும் நம்முடைய ஸ்ரீவைணவ தர்சனத்திற்காகவும் இவ்வளவாவது அடியேனல் செய்ய முடிந்ததே என்று அடக்கமாகக் கூறினர்.

இராமானுசர் ஒருநாள் கூரத்தாழ்வானை அழைத்து “நீர் நம்முடைய வரதராசப் பெருமானைக் குறித்துக், கண் வேண்டுமென்று தோத்திரத்தை விண்ணப்பம் செய்யவேண்டும்” என்று பணித்தார். ஆழ்வானே அடியேனுக்கு தேவரீர் அளித்துள்ள ஞானக்கண் இருக்கும் பொழுது ஊனக்கண்ணைப் பெறுவதற்காகத் தோத்திரம் செய்ய வேண்டுமா? வேண்டுமானல் பெருமானை நான் தோத்திரம் செய்கிறேன். கண் வேண்டுமென்று கேட்கமாட்டேன் என்று கூறிவிட்டார். பின்பு இராமானுசருடைய கட்டளையின் பேரில் ‘வரதராஜஸ்தவம்’ என்ற பெயரால் காஞ்சி வரதராசப் பெருமானைக் குறித்து நூறு சுலோகங்கள் கொண்ட வடமொழித் தோத்திரப் பாடல்களைப் பாடினர்.

இராமாநுசரும் அப்பாடல்களைக் கேட்டு மகிழ்ந்தார். பின்பு கூரேசனை அழைத்துக் கொண்டு காஞ்சிபுரத்துக்குச் சென்றார். வரத ராசப் பெருமாள் கோவிலில் அப்பாடல்கள் அரங்கேற்றப்பட்டன. அப் பாடல்களைக் கேட்டு மகிழ்ந்த பெருமாளும் ஆழ்வானுக்கு கண்களை அருளினார். அப்படி அருளப்பட்ட கண்களாலும் ஆழ்வான் மகிழ்ச்சி யடையவில்லை. எம்பெருமானைக் காணக்கூடியதும், ஆசாரியராகிய இராமாநுசரால் அளிக்கப்பட்டதுமாகிய ஞானக்கண்களால் தான், உள்ளபடி மகிழ்ச்சியடைந்தார். மேலும் பெருமாள் ஆழ்வானிடம் 'வேறு ஏதேனும் வரம் கேளும்' என்று சொன்னபொழுது அதற்குப் பதிலாகக் கூரத்தாழ்வான் 'நான் பெற்ற பேறு நாலூரானும் பெற வேண்டும்' என்று கேட்டார். அதாவது தன்னுடைய கண்களை இழப் பதற்குக் காரணமாயிருந்த நாலூரானுக்கும் நற்பேறு வேண்டும் என்று வேண்டினார். இப்படித் தனக்குத் துன்பம் செய்தவருக்கும் நன்மையே செய்யும் நல்லுள்ளம் படைத்தவராக விளங்கினார்.

இராமாநுசரும் ஆழ்வானுடைய திருவுள்ளத்தை மிகவும் புகழ்ந்து பெருமாளிடம் விடைபெற்றுக் கொண்டு சீடர்கள் சூழ ஆழ்வானோடு மறுபடியும் திருவரங்கத்திற்கே வந்து சேர்ந்தார். இப்படியே சில திங்கள் சென்றன. மடத்தில் ஸ்ரீ பாஷ்யம், பகவத்விஷயம் போன்ற உயர்ந்த நூல்களை சீடர்களுக்கு இராமாநுசர் உபதேசித்து வந்தார்.

எம்பெருமானார் என்கிற இராமாநுசருக்குப் பல விதங்களிலும் உயர்ந்த பண்பாடுடைய சீடர்கள் பலர் அக்காலத்தில் உடனிருந்து தொண்டு செய்தனர். அவர்களில் முக்கியமாகக் கூரத்தாழ்வானையும் முதலியாண் டானையும் முதலில் குறிக்கலாம். இருவருமே ஞானத்தாலும், அனுட் டானத்தாலும் மிகச் சிறந்தவர்கள். அடுத்தபடியாக எம்பார், அருளாளப் பெருமானார், எம்பெருமானார், கிடம்பி ஆச்சான் போன்றவர் களைச் சொல்லலாம். இராமாநுசர் தமது மதமாகிய பக்தி மதத்தை நாடெங்கும் பரப்பப் பாடுபட்டார். ஸ்ரீ வைஷ்ணவத் தொண்டைச் செய் வதற்காகவும், தமது விசிஷ்டாத்வைத கொள்கைகளைப் பரப்புவதற்காக வும், பல சீடர்களை நியமித்தார்.

இராமாநுசர் தம்முடைய கொள்கைகளைப் பரப்புவதற்காக எழுபத்து நான்கு ஆசாரியர்களைத் தேர்ந்தெடுத்தார். அவர்களுக்கு எழுபத்து நான்கு சிம்மாசனாதிபதிகள் என்று பெயர் சூட்டினார். பகவானுக்கும் பாகவதர்களுக்கும் தொடர்ந்து தொண்டு செய்வதே அவர்களுடைய முக்கியப் பணியென்று பணித்தார். இந்த எழுபத்து நான்கு சிம்மா சனாதிபதிகளைத் தவிர எழுநூறு துறவிகளையும், பன்னீராயிரம் ஏகாங்கி களையும் முந்நூறு கொற்றியம்மைமார்களையும் ஸ்ரீ வைஷ்ணவ தர்சனத் திற்குப் பல இடங்களில் தொண்டு செய்ய இராமாநுசர் ஏற்பாடு செய்தார் என்று குரும்பரம்பரை கூறுகின்றது. இவர்கள் தொண்டுக்கே முதன்மை பூண்ட காரணத்தால் முதலிகள் என்று கூறுவது வழக்கம். இவ்விதம் கடல் போன்ற சீடர்குழாத்தைக் கட்டி வளர்த்து இராமாநுசர் பெருந்தொண்டாற்றினார்.

இந்நிலையில் இராமானுசருக்கு நூற்று இருபது வயதில் தள்ளாமையும், அசக்தியும் அதிகமாயிற்று. வயதான நிலையிலும் சாத்திர அனுட்டானங்களை விடாமல் கடைப்பிடித்து வந்தார். திருவரங்கன் கோயில் பணிகளையெல்லாம் செம்மையாகச் செய்து, பல திட்டங்களை ஏற்படுத்தித் தானே மேற்பார்வை செய்து வந்தார்.

இராமானுசருடைய மடம், எப்பொழுதும் வேத ஒலி சூழ்ந்தும், திவ்வியப்பிரபந்த ஒலியால் பொலிந்தும் காண்பவர்களையும், கேட்பவர்களையும் தம்பால் ஈர்க்கும் வகையில் விளங்கியது. பாகவதர்கள் எல்லாத் திசைகளிலிருந்தும் வந்த வண்ணமிருந்தனர். தம்மைச் சரணடைந்த அன்பர்களுக்கெல்லாம் வேற்றுமையின்றி ஆழ்வார்களின் அருளிச் செயல்களாகிற திவ்வியப்பிரபந்தத்தை இராமானுசர் உபதேசித்து வந்தார்.

இப்படியிருக்கும் நாளில் கூரத்தாழ்வான் திருமேனிப் பாங்கில்லாமல் சிறிது துன்புற்றார். உடனே இராமானுசரை வரவழைத்துத் தனக்கு தேகவியோகம் உண்டாகப் போகிறது. நியமனம் அருளவேண்டும் என்று வேண்டினார். இராமானுசரும் கண்கலங்கி உம்மை விட்டுவிட்டு நான் எப்படி இருப்பேன். என்னையும் உடன் அழைத்து செல்லலாகாதோ என்று கேட்டார். எனினும் விதிக்கு யாரும் விலக்கல்லவே. ஆழ்வான், ஆண்டாள் என்னும் தன் மனைவியும், பட்டர், சீராமப்பிள்ளை என்ற புதல்வர்களும், மற்றும் ஆயிரக்கணக்கான ஸ்ரீ வைஷ்ணவர்களும் சூழ்ந்திருக்கும் போது ஆசாரியன் திருவடியை அடைந்து விட்டார்.

இராமானுசருடைய கலங்காத கண்களும் கலங்கின. சீடர்களெல்லாம் கதறி அழுவதைப் பார்த்த இராமானுசர் தம்முடைய கண்களைத் துடைத்துக் கொண்டு, அவர்களுக்கு ஆறுதல் கூறினார். பின்னர் பட்டரையும், சீராமப்பிள்ளையையும் தேற்றிச், செய்ய வேண்டிய உத்தர கிரியைகளை மூத்த பிள்ளையாகிய பட்டரைக் கொண்டு செய்து முடித்தார்.

காரியங்கள் முடிந்தவுடனே பட்டரை அழைத்துக் கொண்டு திருவரங்கனாகிய அழகிய மணவாளனிடம் சென்று தன் தந்தையாகிய ஆழ்வானை இழந்து நிற்கும் இவருக்கு, எவ்வுயிருக்கும் தந்தையாய் நின்று உதவி புரியும் நீரே இனித் தந்தையாக நின்று உதவ வேண்டும் என்று விண்ணப்பம் செய்தார். அரங்கனும் அர்ச்சகர் வழியாக அப்படியே பட்டரை நமது மகனாக நாம் ஏற்றுக் கொண்டோம் என்று கூறினார்.

பிறகு இராமானுசர் பட்டரையழைத்துக் கொண்டு மடத்துக்கு வந்தார். அங்கிருந்த எம்பாரிடம் பட்டரைக் காட்டி "இவருக்கு நம்முடைய தரிசனத்தை வளர்ப்பதற்குரிய சிறப்புப் பயிற்சியை அளிக்க வேண்டும்" என்று நியமித்தார். எம்பாரும் அப்படியே என்று பட்டரைத் தேற்றிப் பல வகையான ஞான நூல்களையும் கற்றுக் கொடுத்து ஆசாரிய பீடத்தில் அமர்த்தினார்.

(தொடரும்)

ஆமை போல் ஆடுகின்றேன்

டாக்டர். அ. மா. பரிமணம், எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,

நீர்த்தொட்டியை நிரப்புவதற்காகக் குழாய்கள் இருக்கின்றன. கவனமாக இருந்தால் தொட்டி நிரம்ப நீரைப் பெற்றுப் பயனடையலாம். இல்லையேல் நீர் முழுவதும் குழாய் வழியே வெளியேறி விடும். நன்மைக் குரிய வாயில்களே தீமைக்குரியனவாகி அல்லல் செய்துவிடும்.

மக்கள் ஞானம் பெறுவதற்காக மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகள் அமைந்துள்ளன. இந்த ஐம்பொறிகளும் 'ஞானேந்திரியங்கள்' எனப்படும். இவற்ருல் உணரப்படும் புலன் களாகிய 'சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம்' என்னும் ஐந்தும் தன் மாத்திரைகள் என்று கூறப்படும். திசையறிந்து குதிரையைச் செலுத்து பவன் பயனடைவது போல, வகையறிந்து இப்புலன்களை ஆள்பவன் நன்மை அடைகின்ருன். மற்றவர்கள் துன்பமெய்துகின்றனர். ஐம்புலன்களின் வகை தெரிந்து, ஆளும் வல்லமை பெற்ருர்க்கு அவை ஏவலர்களாக, அவன் தலைவனுக அமையக் காணலாம். மற்றவர்களுக்கு அவ்வைந்து புலன்களும் தலைவர்களாக, அவன் ஏவலனுக அமைந்து இடர்ப்பட நேரும்.

ஐம்புலன்களும் தாங்கள் இழைக்கும் துன்பங்களை, நுகரும் மக்கள் துன்பமென உணராது இன்பமாக மயக்குமாறு செயல்படுதலின் அவற்றை 'வஞ்சர்' என்றும் 'கள்வர்' என்றும் அருட்சான்ருேர்கள் சுட்டி எச்சரிப்பாராயினர். 'ஐம்புலவேடர்' எனச் சிவஞானபோதம் குறிப்பிடுகின்றது.

அறிவு வாயில்களாகிய புலனைந்தும், நெறி மயங்கி வஞ்சிக்கும்போது, அவைகளே அறியாமை வாயிலாகி மக்களைப் பேதமைப்படுத்துகின்றது. அதன் பயனுக எய்தும் இன்பம், சிற்றின்பம் எனப்பட்டு, அளவிலும், தன்மையிலும் சிறுமையெய்திப் பின் துன்பத்திற்குக் காரணமாகிறது. அதனுல், இறைநெறி நின்று, உலகமக்களைத் தெருட்டும் பணியில் நின்ற அருட்சான்ருேர்கள் ஐம்புலச் சேட்டைகளைப் பலவாறு எடுத்துரைத்து விளக்குவதைத் தங்கள் கடமையுள் ஒன்ருகக்கொண்டனர்.

'உன்னுருவிற் சுவையொளியூருேசை நாற்றத்துறுப்பினது குறிப் பாகும் ஐவிர்' எனப் பொறிகளையே விளித்து அவற்றை வாகை சூடிய, பெரிய ஞான வீரராகும் அப்பரடிகள் உலக மக்களுக்கு உண்மை உணர்த்துவதற்காக, ஐம்புலனுல் தாம் துன்பப்பட்டு நின்றதாகப் பாடி யுள்ளார். அதனுல் அடிகளைப் பரவ முற்படும் நம்பியாண்டார் நம்பிகள் அவரைப் "புலனொடாடித் திரிமனத்தவர், பொறி செய் காமத் துரிசு அடக்கிய புனிய நேயத்தொடு" விளங்குபவர் எனக் கூறியுள்ளார். மேலும் அடிகள் உலகில் உயிர்கள் இறந்தும் பிறந்தும் உழலச் செய்யும் மயக்க உணர்வை மாற்றவல்ல உண்மைக் கவிதைகளை உரைத்தவரா வார் என்பதனை,

> "உலகின் மாயப்பிறவி யைத் தரும்
> உணர்வி லாவப் பெருமயக்கினை
> ஒழிய வாய்மைக் கவிதையிற் பல
> உபரி யாகப் பொருள் பரப்பிய"

திருநாவுக்கரய தேவர் எனக்கூறிப் போற்றுகின்ருர்.

ஐம்புலன்களால் அலைக்கழிக்கப்பட்டுத் துன்புற்று வாடிப் பிறவிப் பயன் அறியாது தவிக்கும் எண்ணற்ற ஆன்மாக்களின் இயல்பினைத் தன்மேல் ஏற்றி இரங்கிக் கூறுகின்றார், அப்பரடிகள்.

பயணம் செய்யும் ஒருவனைத் திருடர்கள் வழிமறித்துக் கொள்ளுகின்றார்கள். திருடர்கள் ஒருவரிருவரல்லர்; ஐந்து பேர்களும் கூடித் துன்பம் செய்கின்றார்கள். துன்புறுத்தும் அக்கள்வர்களிடமிருந்து தப்பி ஓட முடியவில்லை. அவர்கள் சுற்றிலும் வளைத்துச் சூழ்ந்து நின்று பற்றித் துன்பஞ் செய்கின்றார்கள். ஓடித் தப்பவும் வழியறியாது, எதிர்த்து வெல்லவும் வகையறியாது வேதனைப்பட்டு வாடி இளைத்து வருந்துகின்றான் அப்பயணி.

ஆரா இன்ப அருட்கடலாய் விளங்கும் ஆண்டவனுடைய திருவருளை நாடி, அப்பரடிகளும் ஆன்மப் பயணம் மேற்கொள்ளுகின்றார். வழியிடைச் செல்லும்போது ஐந்து பேர் திருடர்கள் எதிர்க்கின்றனர். இங்குத் தோன்றிய திருடர்கள் எங்கிருந்தோ வந்துவிடவில்லை. அடிகளினுடனேயே இருந்தவர்கள் தாம். இப்பொழுது வஞ்சக் கள்வர்களாகி நடுக்கம் செய்து வருந்துகின்றனர். புறத்தே தப்பி ஓடி முடியாது வளைத்து நிற்கும் கள்வர்கள் ஐவரும் மெய், வாய், கண், மூக்குச் செவி எனப்படும் ஐம்புலன்களேயாகும்.

ஐந்து பேர்களும் உடன் வந்தபோது, அவர்கள் கள்வர்கள் ஆவார்கள் என்று உணர்ந்து கொள்ள முடியவில்லை. பின்னர் அவர்கள் துன்புறுத்தும்போது அவர்களிடமிருந்து தப்பித்துக்கொள்ளவும் முடியவில்லை. இதற்கு மேலாக அவர்கள் செய்யும் துன்பங்களைத் துன்பங்களாக உணர்ந்து தெளியும் தெளிவில்லாத தன்மை-அறியாமை-மீதூர்கின்றது. அதனால் துன்பத்தில் திளைக்க நேரிடுகின்றது. இவ்வளவையும் அடிகள் "வளைத்து நின்று ஐவர் கள்வர் வந்தெனை நடுக்கம் செய்ய—— இளைத்து நின்று ஆடுகின்றேன்" என்ற அடிகளால் சுட்டுகின்றார்.

தெளிவில்லாது, பேதமை யெய்தி அடிகள் தாம் வருந்தும் வருத்தத்தினை அழகியதோர் உவமையால் விளக்கியுள்ளார். ஆமை உண்பவன் ஒருவன் தான் பிடித்த ஆமையினைச் சமைத்துண்ண முற்பட்டு அதனை, எரிகின்ற அடுப்பின் மேல் ஏற்றப்பட்டுள்ள உலைநீரில் இடுகின்றான். அச்செயலின் விளைவை அறியாத ஆமை உலைநீரில் ஆனந்தமாக மூழ்கி விளையாடுகின்றது. நேரம் ஆக ஆக, வெப்பம் பெருகப் பெருக ஆமை துன்பத்தை உணரத் தொடங்கி இறுதியில் கொதிநீரில் இறந்து அழிகின்றது. மெய்ம்மை உணராத நிலையில், இன்பமாகத் தோன்றிய துன்பம், இறுதியில் உயிரையே அழித்துவிடுகின்றது. தப்ப முடியாத வகையில் ஆமையின் அழிவு அமைந்து விடுகிறது. அவ்வாறே, ஆன்மாக்களும் உலக வாழ்வில் ஈடுபடும்போது புலன்கள் தரும் இன்பத்தில் திளைத்து, உண்மையறியாது மயங்குகின்றன. இறுதியில் பிறவிப் பயன் எய்தாமலேயே இறந்துபடுகின்றன.

உலைநீரில் உலவி மகிழ்ந்து பின் இறுதியில் இறந்துபடும் ஆமையைப் போலத் தானும் மெய்ம்மையறியாது, தெளிவில்லாதவனாகி இளைத்தொழிந்தேன் என்னும் செய்தியினை அப்பரடிகள்,

"தளைத்து வைத்து உலையை ஏற்றி தழல்எரி மடுத்த நீரில்
திளைத்து நின்று ஆடுகின்ற ஆமைபோல் தெளிவிலாதேன்
இளைத்து நின்று ஆடுகின்றேன்"

என்று அழகுறக் காட்டுகின்றார்.

அடிகளுக்குப் பன்னூறாண்டுகளுக்கு முன்னர்த் தோன்றிய சமண முனிவர் ஒருவர் இதே உவமையினைப் பயன்படுத்தியுள்ளார். அழிக்கும் கூற்றுவன் காலம் கருதி எதிர்பார்த்திருப்பதை அறியாமல் உலக ஆசை யாகிய வலையில் அகப்பட்டு மகிழ்ந்து பின் அழியும் மக்களின் அறியா மையை விளக்க இவ் ஆமை உவமையை,

> 'கொலைஞர் உலையேற்றித் தீமடுப்ப ஆமை
> நிலையறியாது அந்நீர்ப் படிந்தாடி யற்றே'

எனக் கூறியுள்ளார். தெய்வ நினைப்பு இல்லாத சமண அறிஞர் காட்டிய ஆமை உவமை, தெய்வ நினைப்பொடு அந்த நிலைக்கு இரங்கி வருந்தும் அடிகளின் வாக்கில் மிகவும் சிறப்புற்று விளங்குகிறது. ஒருமையிற் புலனடங்கி அதன் பயனாக எழுமையும் ஏமாப்பும் எய்தும் நிலைமையை விளக்க வள்ளுவர் ஆமையினை உவமை காட்டினார். புலன் அடங்காது அதன் வழிப்பட்ட நிலையில், பேதமையால் மயங்கி ஆன்மாக் கள் துன்பமுற்று அழியும் நிலைமைக்கு அடிகள் அதே ஆமையின் பிறிதோர் இயல்பினை உவமை காட்டியது சிறப்பாக உள்ளது. அழகு மிக்க அந்த திருநேரிசைத் திருப்பாடல் வருமாறு :—

> 'வளைந்து நின்று ஐவர்கள்வர் வந்தெனை நடுக்கம் செய்யத்
> தளைத்துவைத்து உலையை ஏற்றித் தழல்எரி மடுத்த நீரில்
> திளைத்து நின்று ஆடுகின்ற ஆமைபோல் தெளிவிலாதேன்
> இளைத்து நின்று ஆடுகின்றேன் என்செய்வான் தோன்றி
> னேனே'

'தெளிவிலாதேன் இளைத்து நின்று ஆடுகின்றேன்' என்னும் தொட ரால், ஐம்புலன்களும் கள்வர்கள் போலத் துன்பம் செய்யும் இயல்பையும் அத்துன்பத்தையும் துன்பம் என்று அறிந்து கொள்ள முடியாத இயல்பையும், அதிலிருந்து தம்மைத் தப்புவித்துக் கொள்ள முடியாத இயல்பையும், இறுதியில் மீட்சியில்லாது அழிவெய்தும் இயல்பையும் தாம் எய்தியதாக அடிகள் குறிப்பிட்டுள்ளார். அழிவிலிருந்து தம்மைக் காத்துக்கொள்ளும் வகை காணாத நிலையில், 'நான் ஏன் பிறந்தேன்' என நினைந்து அடிகள் ஏங்கும் ஏக்கத்தினை 'என் செய்வான் தோன்றி னேனே' என்னும் இறுதித் தொடர் நன்கு எடுத்துக்காட்டுகின்றது.

இறையருள் பற்றற்று மெய்யுணர்ந்து, வீடுபேறெய்த விரும்புபவர் களுக்குத் தன்னை உணரும் உணர்வும், தன்னிலைக்கு இரங்கும் இரக்க மும் வேண்டப்படுவனவாகும். அவற்றால் தலைவனை உணர்ந்து, அவன் தான் தலைப்படுவதற்காம் தன்மை தோன்றும். 'தெளிவிலாதேன்' என்றமையால், தன்னை உணர்ந்து கொண்ட உணர்வும், 'என் செய் வான் தோன்றினேன்' என்றமையால், தன்னிரக்க உணர்வும் அடிகள் பால் தோன்றி அவனருளாலே அவன்தான் எய்துவதற்கான தன்மையை அவர் எய்தியிருந்த நிலைமை புலனாகின்றது.

'புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே' என்று கூறி, நண்ணரிய சிவானந்த ஞானவடிவேயாகி, அண்ணலார் சேவடிக்கீழ் வீற்றிருக்கும் பேறுபெற்ற அப்பரடிகளின் வாழ்வினையும் வாக்கினையும் ஒருங்கே காணும் போது, இத்திருநேரிசை யில் அடிகள் தம் நிலைக்குக் கூறிய ஆமை உவமச் செய்தி உண்மையில் அவருக்குப் பொருந்துவதன்று என்பதும், அந்த நிலையில் வாழும் எண்ணற்ற மக்களுக்கே பொருந்தும் என்பதும் புலனாகின்றது. அறியாமையில் உழன்று அல்லற்பட்டு ஆற்றாது அழுதிரங்கும் ஆன்ம கோடிகள் உண்மையுணர்ந்து உய்திபெறும் வழிகாட்டி, வாழ்வு நல்குர் அமுதப் பாடலைப் படித்துப் பயன்பெறுவோமாக.

"வன்தொண்டன் என்பதோர் வாழ்வு"

டாக்டர் வித்துவான் திரு. வை. இரத்தினசபாபதி, எம்.ஏ., பி.ஓ.எல்., பிஎச்.டி.,

5. தம்பிரான் தோழராதல்

'சிவம்' என்னும் ஓசை தமக்கே உரிமை உடையதாகக் கொண்ட செம்மேனி எம்மானாகிய பரம்பொருள் சுந்தரமூர்த்தி சுவாமிகளை ஆட்கொள்ளுதல், தடுத்தாட் கொள்ளுதல் பற்றி ஆராய வேண்டிய நிலையில் 'தம்பிரான் தோழராதல்' என்ற நிகழ்ச்சியும் நன்கு சிந்திக்க வேண்டிய ஒன்றாக அமைகிறது. சுந்தரரைத் 'தம்பிரான் தோழராக' ஆக்கிய இறைவன் நிலையையும், தம்பிரான் தோழர் என்ற தொடர்பைச் சுந்தரர் எவ்வாறு கருதிக் கூறுகிறார் என்ற நிலையையும் இணைத்து ஆராய வேண்டும். 'தம்பிரான் தோழராதல்' என்ற அருளிப்பாட்டை விரிவாக ஆராய்வதன் மூலம் இறைவனின் ஆட்கொளல் நெறி பற்றிய ஆய்வுக்குத் துணை செய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

நிகழ்ச்சி நடைமுறை :

சுந்தரர் திருவாரூரை நோக்கி வருகிறார். ஏனைய அடியவர்களுக்குச் சோதனைகள் எத்துணையளவு முன்னேற்பாடாக அமைக்கப் பெற்றிருக்குமோ, அதனினும் சிறப்பாக, இறைவன் திருவருள் சுந்தரரை வரவேற்கிறது. சுந்தரர் வாழ்வில் சுந்தரருக்கு அக்கரை இருந்ததோ இல்லையோ இறையருளுக்கு எந்த அளவுக்கு அக்கரை இருக்கிறது என்பதை நாம் உணரும் வகையில் திருவருள் செயல்படுகிறது, இல்லை, செயற்படுத்துகிறது. திருவாரூரில் நடைபெற வேண்டிய செயல்களுக்கெல்லாம் முன்னேற்பாடு தில்லையிலேயே தொடங்கப்பெற்று வருகிறது.

"ஆரூரில் வருக நம்பால்" என்ற அசரீரி வாக்கானது தில்லையிலேயே செயற்படுகிறது. திருவாரூருக்கு அணுகிவரும் சுந்தரருக்கு வரவேற்பளிக்க வேண்டும், உபசரிப்பு விழா நிகழ்த்த வேண்டும் என்றெல்லாம் இறையருள் நினைக்கிறது.

தேராரும் நெடுவீதிகளை உடைய திருவாரூரில் வாழ்கிற அனைவருக்கும் கேட்குமாறு ஓர் ஒலிபரப்பு முறையை இறைவனே மேற்கொள்ளுகிறான். "ஆராத காதலின் நம் ஆரூரான், நாம் அழைக்க வருகிறான்" என்று அசரீரி கூறுகிறது.

ஆராத காதல் சுந்தரருக்கா, இறைவனுக்கா என ஒரு வினாவை எழுப்பினால். ஆராத காதலினால் நாம் அழைக்க நம் ஆரூரன் வருகின்றான் என்று பொருள் செய்யுமளவுக்குச் சேக்கிழார் வாக்கின் நுட்பம் அமைகிறது.

திருநாவலூரர், சுந்தரர், வன்தொண்டன் என்றிவ்வாறுள்ள பெயர்களாற் கூறினால் ஒருவேளை வரவேற்பு எப்படி இருக்குமோ எனக் கருதி 'நம் ஆரூரன்' என்றார். ஆரூரர் வரும்போது ஆரூர் நகரில் உள்ளவர்கள் வரவேற்கத் தயங்குவார்களா? ஊர்ப்பற்றையும் உறைய வைக்கிறான் இறைவன். "நம் ஆரூரன், ஆராத காதலின் நாம் அழைக்க வருகிறான்" என்று பறை சாற்றுகிறார். 'எதிர் கொண்டழையுங்கள்' என்று மட்டும் நிறுத்தாமல் "மகிழ்ந்து எதிர்கொள்வீர்" என்றார்,

இவையெல்லாம் திருவாரூர் நகரத்தார் அளிக்கவேண்டிய வரவேற்புக்கான ஏற்பாடு. இறைவன் தன் கோயிலில் தானே வரவேற்புக் கொடுக்கிருன். எதைக் கொடுப்பது? என்பதுதான் இறைவனுக்கு உள்ள பிரச்சினை. அந்தண குலத்தில்—சிவாசாரியார் குலத்தில் தோன்றி அரச குலத்தில் வளர்ந்து சிறந்த ஆரூரருக்கு— சுந்தரருக்குக் கொடுக்கக் கூடியதாக உள்ள பொருள் எது? என்பதை நோக்குகிருர். ஒன்றும் இல்லை. இறுதியில் தன்னையே கொடுத்து விடுகிருர். இறைவன் வாக்கு

1. தோழமையாக நம்மைத் தந்தனம்
2. நாம் முன்பு தொண்டு கொண்ட வேள்வியில் அன்று
 நீ கொண்ட கோலம் என்றும் புனைக
3. நின் வேட்கை தீர மண்மேல் விளையாடுக
4. வாழி.

இறைவன் சுந்தரரைத் தோழராக ஏற்றுக் கொண்டான் என்ற அளவில் இவ்வுரைகளை நாம் கருதி ஒதுக்கி விடுதல் ஆகாது. சுந்தரர் திருவாரூரில் எத்தகைய தகுதி அடிப்படையில் வாழவைக்கிருர் என்பதை இவைகளால் உணரலாம். வெளிநாட்டிலிருந்து வரும் அரசு விருந்தினர்களை உபசரிக்கும் முறைகளை மனத்தில் அமைத்துக் கொண்டு, இறைவன் சுந்தரருக்குக் கூறியவைகளை ஒத்துப் பார்த்தல் வேண்டும். நாம் அழைத்ததால் வந்த விருந்தினர், நட்பு முறையில் வந்தவர் என்ற சில வகைகளை மட்டுமே இன்றைய வரலாற்றில் நாம் காணலாம்.

நாட்டின் தலைமைக் குடிமகன் அல்லது அரசன் அல்லது இறைவன், 'நானே விரும்பி அழைத்தேன்' என்று சொல்லி விட்டாலே போதுமானது, 'என்னையே தோழனுகத் தந்தேன்' என்ருர். 'முன்னெரு நாள் நீ கொண்ட கோலத்தை நான் கெடுத்து விட்டேன்; அதே கோலத்தை என்றும் புனைக' என்ருர். எனவே, திருமணக் கோலத்தோடு அவர் எந்நாளும் விளங்க வேண்டும், அந்த வகையில் ஊரார் அவரைக் கவனித்துக் கொள்ள வேண்டும். "வேட்கை தீர மண்மேல் விளையாடுக" என்றும் கூறுகிருர். எவ்வளவு பெரிய உரிமை. எந்த அரசு அல்லது எந்த அரசன் இத்தகைய உரிமைகளை வழங்க முடியும்!

இத்துணைச் சிறப்புக்களும் சுந்தரருக்காகவா வழங்கப் பெறுகின்றன? அது அவன் விருப்பாயின் தில்லையிலும் செய்திருக்கலாம்; வேறு பல நகரங்களிலும் அமைத்திருக்கலாம். சுந்தரர் தொண்டைவிடப் பரவையாரின் பக்தி பன்மடங்கு சிறந்தது. உலகத்துயிர்களுக்கெல்லாம் தாயாக தந்தையாக அமைந்த பெருமான், சடங்கவி சிவாசாரியார் திருமகளாருக்கு வர இருந்த வாய்ப்பைத் தடுத்து நிறுத்தி, பரவையாருக்குக் கொண்டு வந்து தருகிருர். முன்விதியைக் காரணமாகக் கூறலாம். ஒரே தன்மைத்தான விதியமைந்த பரவையார் சங்கிலியார் ஆகிய இருவரிலும் பரவையார்மேல் அமைத்த தந்தைப் பாசம் பன்மடங்கு சிறப்பைத் தருகிறது என்று எண்ணும் நிலைமைக்குச் செய்திகள் அமைந்து விடுகின்றன. சேரமான் பெருமாள் நாயனுரை—சேரநாட்டுப் பேரரசை விருந்தாக ஏற்றுப் படைஞர்களுடன் பிறரும் உணவு கொள்ளுமாறு விருந்து அமைத்துக் கொடுக்கக் கூடிய அளவுக்குப் பரவையாரை உயர்த்தி விடுகிறது இறைவன் தந்தைப்பாசம். திருவாரூர்ப் பெருமக்களுக்கெல்லாம் வாழ்வளிக்கக் கூடிய ஒப்பற்ற பெரும் திருமகள் பரவையார். திருவாரூர் முழுவதும் கொண்டாட வேண்டிய ஒப்பற்ற

ஒரே மாப்பிள்ளை சுந்தரனூர். வேறு பெண்ணுக்கு உரிமையுடையவராக ஆக இருந்தவரைத் தடுத்து, அழைத்துவந்து இங்கே மணமகனாக்கி யிருக்கிறான் இறைவன்.

பரவையாரை–மனத்தாலும் வாக்காலும் நினைதற்கெட்டாப் பெருந் தொண்டினைச் செய்து சைவம் புரந்த பெருந்தவத்துச்செல்வியாரை, அவர்தம் பெருமையை மையமாக வைத்து, சுந்தரர் வாழ்வை எண்ணினால், இறைவன் சுந்தரருக்காகச் செய்தவை மிகச் சாதாரணமானவை என்று கூட எண்ண வேண்டி வரும்.

அரசின் முறைமையில் வரும் விருந்தினர்களையெல்லாம் உபசரிக்கும் வகைகளை மந்திரியாக இருந்து நன்குணர்ந்த பெருந்திருவினராகிய சேக்கிழாரின் வாக்கன்றோ! அவர்தம் அருள்வாக்கு, சுந்தரமூர்த்தி சுவாமிகளை மட்டும் எண்ண வைக்கவில்லை; பரவையாரையும் உடன் கொண்டு கருதவேண்டும் என்ற எண்ணத்தை உண்டாக்கியிருக்கிறது.

தம்பிரான் தோழரான தன்மையில்- சுந்தரர் :

இறைவனுக்கு யான் தொண்டன், வன்தொண்டன், ஆள் என்ற சொற்களைத்தான் தனக்குரிய நிலையை விளக்கும் சொற்களாகச் சுந்தரர் குறிப்பிடுகிறார். திருவாரூர், திருவொற்றியூர் போலவே ‘திருநள்ளாறு’ம் சுந்தரர் மனத்துக்கு மிகவும் உவந்த தலமாக இருந்தது.

திருநள்ளாற்றில், இறைவனை வணங்கும்போது, தம் பழைமை வரலாறுகளை நினைவு கூறுகின்றார்.

“ கற்பகத்தினைக் கனகமால் வரையைக்
காமகோபனைக் கண்ணுதலானைச்
சொற்பதப் பொருள் இருள் அறுத்தருளுந்
தூய சோதியை வெண்ணெய் நல்லூரில்
அற்புதப் பழ ஆவணங் காட்டி
அடியனா என்னை ஆளது கொண்ட
நற்பதத்தை நள்ளாறனை அமுதை
நாயினேன் மறந்து என் நினைக்கேனே ” 7.68.6

திருநள்ளாற்றுப் பதிகத்திலேயே, ‘தம்பிரான் தோழனை’ அருளிப் பாட்டையும் நினைந்து பாடுகிறார்.

மாதினுக்கு உடம்பு இடங் கொடுத்தானை
மணியினைப் பணிவார் வினை கெடுக்கும்
வேதனை வேத வேள்வியர் வணங்கும்
விமலனை அடியேற்கு எளிவந்த
தூதனைத் தன்னைத் தோழமை அருளித்
தொண்டனேன் செய்த துரிசுகள் பொறுக்கும்
நாதனை நள்ளாறனை அமுதை
நாயினேன் மறந்து என் நினைக்கேனே. 7. 68. 8.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் இறைவன் அருளிய இந்த அருளிப்பாட்டை மேலே குறிப்பிட்ட இச்செய்யுளிற் கூறியது போலவே வேறு இரண்டு இடங்களிலும் எடுத்துரைக்கின்றார்.

"ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான்செய்யும் துரிசுகளுக்கு உடனாகி
மாழை ஒண்கண் பரவையைத் தந்து ஆண்டானை மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே"

7. 51. 10.

நாதனை நாதம் மிகுத்த ஓசையது ஆனவனை
ஞான விளக்கொளியாம் ஊன் உயிரைப் பயிரை
மாதனை மேதகுதன் பத்தர் மனத்து இறையும்
பற்று விடாதவனைக் குற்றமில் கொள்கையனைத்
தூதனை என்றனை ஆள் தோழனை நாயகனைத்
தாழ் மகரக் குழையும் தோடும் அணிந்த திருக்
காதனை நாயடியேன் எய்துவது என்றுகொலோ
கார்வயல்சூழ் கானப்பேர் உறை காளையையே. 7. 84. 9

இவ்வாறு மூன்று இடங்களில், இறைவன் தம்மைத் தோழமை தந்த அருளிப்பாட்டைக் குறிப்பிடும் சுந்தரமூர்த்தி சுவாமிகள், தோழமையை ஏற்றுக் கொள்ளும் பாத்திரமாக நின்ற நிலையில் தம்முடைய கருத்தை வெளியிடுகிறார். இம்மூன்றிடங்களிலும் சில ஒற்றுமைகள் காணப் பெறுகின்றன.

(1) பரவையாரிடம் தூதுவிட்ட செயல்

(2) பிழை செய்த தன்மை.

மூன்று இடங்களிலும் தூதுச் செயலைப் பேசுகிறார். பரவையாரிடம் இறைவனைத் தூது அனுப்பியது தோழமையால் வந்த விளைவு என்ற குறிப்பைப் புலப்படுத்துகிறார்.

'தொண்டன்' 'அடியன்' என்ற வகையில் தூது அனுப்பியது குற்றமாகலாம்; ஆனால் 'தோழமை' காரணமாக அது அமைந்து விட்டது என விளக்கம் கூறியருளுகிறார் சுவாமிகள் என்றுங் கொள்ளலாம்.

வேறு ஒன்றையுங் குறிப்பிட்டுச் சிந்திக்க வேண்டும். சுந்தரர் இத் தோழமையால் விளைந்த இரண்டு நுட்பமான செயல்களைக் குறிப்பிட்டருளுகிறார்.

(1) தான் செய்யும் குற்றங்களுக்கு உடந்தையாக இருக்கிறான் இறைவன்

(2) தான் செய்யும் குற்றங்களைப் பொறுத்து, ஆளாகக் கொள்கிறான்.

தோழமை காரணமாக இவ்விரண்டு செயல்களும் நடைபெறுகின்றன என்பது சுந்தரர் தம் உள்ளக்கிடக்கை.

உயிர்கள் செய்யுங் குற்றங்களையெல்லாம் பொறுத்தாளுவது இறைவன் அருள் தன்மை என்பது உண்மை. அவ்வாறே உயிர்கள் நன்மைச் செயலிலோ குற்றச் செயலிலோ ஈடுபடும்போது இறைவன் உடனாக இருந்து செயலாற்ற வேண்டிய பொறுப்பு அவனுக்கு உண்டு என்பதும் உண்மை.

ஆனால் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் குறிப்பு அந்த அளவில் நின்று விடவில்லை. தோழமை காரணமாக, நான் குற்றம் செய்யும் போதெல்லாம் அவன் என்னைத் திருத்தாமல் உடந்தையாக இருக்கிறான். செய்து விட்ட பிறகும் அவன் தோழமை காரணமாக என்னைப் பொறுத்தாண்டு விடுகிறான். தோழமை இருவர் பக்கத்திலும் குறைபாட்டை உண்டாக்கி விட்டது என்பதைச் சுந்தரர் தெளிவாகவே குறிப்பிட்டு விடுகிறார் என்றே கொள்ளவேண்டும். (தொடரும்)



தண்டியடிகள் நாயனர்

பழ-தரும-ஆறுமுகம்

தண்டியடிகள், சோழநாட்டிலுள்ள திருவாரூரில் பிறந்த பெருமைத் தவமுடையவர். அவர் பிறவிக் குருடர். அவர் தம் அகக்கண்களால், அண்டவாணர் மறைபாட ஆடும் செம்பொற் கழல்கள், மனத்தில் காணும் கருத்துடையவர். அவர் அரிய திருத்தொண்டில் செறியச் சிறந்திருந் தார். தண்டியடிகள், திருவாரூர்ப் பூங்கோயிலே நாள்தோறும் ஐந்தெழுத்தை ஓதிக் கொண்டே வலம் வந்து வழிபாடு செய்வார்.

இப்படி இருக்கும் நாளில், பூவார் சடிலத் திருமுடியார் மகிழ்ந்த தெய்வப் பூங்கோயிலின் மேற்பாலுள்ள, குளத்தின் பக்கமெல்லாம் அமணர் பாழிகளாய், இடத்தாற் குறைபாடு அடைவதை உணர்ந்தார் அத்திருக்குளத்தைப் பெரிதாக வெட்ட வேண்டும் என மனஎழுச்சி கொண்டார்.

திருக்குளம் இருக்கும் இடத்திற்குத் தண்டியடிகள் சென்ருர். திருக் குளத்தில் தூர்வெட்டியெடுக்க வேண்டிய இடத்தில் ஒரு தறி நட்டார். அத்தறியில் கயிற்றின் ஒரு நுனியைக் கட்டினர். வெட்டியெடுத்த மண்ணைக் கொட்ட வேண்டிய இடத்தில், குளக்கரையில் ஒரு தறி நட் டார். கயிற்றின் மறு நுனியை அதில் கட்டினர். மண்வெட்டியையும் கூடையையும் எடுத்து வந்து, மண்ணை வெட்டியெடுத்து, கயிற்றைப் பிடித்துத் தடவிக்கொண்டே சென்று, கரையில் கொட்டினர். இவ்வாருக நாள்தோறும் இயன்ற அளவு திருக்குளம் கல்லும் பணியைச் செய்து வந்தார்.

நாள்தோறும் தண்டியடிகள், திருக்குளம் தூர் எடுத்து வருவதைக் கண்ட அமணர்கள் பொருமை கொண்டனர். அவரிடம் வந்து, "மண்ணை வெட்டி எடுத்தால் அதிலுள்ள (புழு, பூச்சிகள் போன்ற) பிராணிகள் இறந்து விடும். அவற்றை வருத்த வேண்டா!" என்று சொன்னர்கள். இதைக் கேட்ட தண்டியடிகள், "திருவிலிகாள்! திருக் குளம் வெட்டுதல், சிவபெருமானுக்கான அறச்செயல் என்பது உங்களுக்குத் தெரியாதா?" என்று மறுமொழி சொன்னர்.

எல்லையற்ற ஞானத்தையுடைய தண்டியடிகள் சொன்ன மறுமொழி யைக் கேட்ட முடைநாற்றமெடுத்த உடலை உடையவர்களாகிய சமணர் கள், "நாங்கள் சொன்ன தர்மத்தை கேட்க மாட்டேன் என்கிருயே!

கண்கள் மட்டும் குருடா? காதும் செவிடா?" என்று பழித்தனர். இதைக்கேட்ட தண்டியடிகள், "மந்த உணர்வும், விழிக் குருடும் கேளாச் செவியும் உங்களுக்கே! திரிபுர மெரித்த விரிசடைக் கடவுளின் திருவடி யன்றிப் பிறிதொரு பொருளும் நான் காணேன்! அதனை அறிதற்கு உங்களால் முடியுமோ? எம்பெருமான் திருவருளால் உலகமெல்லாம் உணர்ந்திட, என் கண்கள் ஒளி பெறவும், உங்கள் கண்கள் குருடாக வும் பெற்றால் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டார்.

சமணர்கள், தண்டியடிகள் சொன்னதைக் கேட்டு "உங்கள் இறைவனாகிய சிவனருளால் உன் கண்கள் ஒளி பெற்றால் நாங்கள் இவ்வூரில் இருக்க மாட்டோம்!" என்று சொன்னார்கள். மேலும், தண்டியடிகளிடம் இருந்த மண் வெட்டியையும் கூடையையும் பறித்துக் கொண்டனர். தறிகளையும் பிடுங்கியெறிந்தனர்.

தண்டியடிகள் மிக்க கோபம் கொண்டார். பூங்கோயிலின் மணி வாயிலின் முன் வந்து, இறைவன் திருவருளை இறைஞ்சி, "ஐயனே! அமணர்கள் இன்று அவமானம் செய்தனர். அது கண்டு நான் மிக்க நலிவுற்றேன்! என்னுடைய நலிவை அகற்றித் திருவருள் பாலிப்பீராக!" என வீழ்ந்தார்.

அடியவர்களுடைய துயர்களையெல்லாம் தன் திருவருளால் தீர்த்து வைப்பவனாகிய சிவபெருமானது திருத்தொண்டராகிய தண்டியடிகள், பரவி விண்ணப்பம் செய்து, தொழுதார். பிறகு தாம் தங்கியிருக்கும் திருமடத்திற்குச் சென்றார். எந்த வேலையும் செய்ய இயலவில்லை. அழுது கொண்டே தூங்கி விட்டார். எல்லா உலகங்களையும் படைத் தளித்த முதல்வனாகிய சிவபெருமான், அவர் கனவில் தோன்றி "தண்டியே! உன் நெஞ்சில் நிலவும் கவலையை ஒழி! உனக்குப் பார்வை வரவும், அமணர்களின் கண்கள் குருடாகவும் போகின்றன! எனவே அச்சம் தவிர்க!" என அருளிச் செய்தார். பின் அந்த இரவி லேயே சோழ மன்னனின் கனவிலும் தோன்றி, "தண்டியடிகள் நம் திருக்குளத்தைத் தூய்மைப் படுத்துவதைக் கண்டு பொறுக்கமாட்டாத அமணர்கள், இடையூறு செய்யத், தண்டி கோபம் கொண்டான். அவன் பால் நீ சென்று அவன் கொண்ட கருத்தை முடித்து வைப்பாயாக!" என்று அருள் புரிந்தார்.

கனவு கண்ட அப்போதே அரசன் விழித்தெழுந்து, மெய்மயிர் சிலிர்ப்பப் புளகாங்கிதம் அடைந்தான். குளிர்ச்சி பொருந்திய கொன்றை மலர்களைத் அணிந்த சிவபெருமானைப் போற்றினான். அதி காலையில் தண்டியடிகள் இருக்குமிடம் சென்று தான் வந்த காரணத் தைச் சொன்னான். அதைக் கேட்ட தண்டியடிகள் எம்பெருமான் திருவருட் பெருங்கருணையை நினைந்துருகினார். "என்ன நிகழ்ந்தது?" என்று மன்னன் கேட்டான். தண்டியடிகள், மன்னவா! நான் சிவபெரு மான் மகிழும் பூங்கோயில் திருக்குளத்தை மண் வெட்டிப் பெரிது படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்தேன். அது அமணர்களுக்குப் பொறுக்கவில்லை. என் செய்கை அறமன்று எனப் பலவாறு

சொன்னார்கள். கண்ணொளியிழந்த நான் நட்டு வைத்திருந்த குறித் தறிகளைப் பிடுங்கி எறிந்தனர். என்னைத் துன்புறுத்தினர். மண் வெட்டியைப் பறித்துக் கொண்டனர். மேலும் என்னைப் பார்த்துக் "கண்ணோடு காதையும் இழந்தாயோ?" எனக் கேலி பேசினர். அதற்கு நான், "சிவபெருமான் திருவருளால் என் கண்கள் ஒளி பெறவும், உம் கண்கள் குருடாகவும் பெற்றால் யாது செய்வீர்கள்?" என்று கேட்டேன். அதற்கு அவர்கள் "நாங்கள் இந்த ஊரில் இருக்க மாட்டோம்" என்று சொன்னார்கள். இனிமேல் நிகழ்வதைக் கண்டு, நீங்கள் இந்த வழக்கை முடித்து வைத்தல் வேண்டும்" என்றார்.

அது கேட்ட அரசன், சமணர்களை அங்கே அழைத்தான். வழக்கினைப் பற்றிக் கேட்டான். அதற்குச் சமணர்கள் உடன் பட்டனர்.

தண்டியடிகள் முன்னே சென்றார்; அரசனும், சமணர்களும் பின்னே சென்றார்கள். திருக்குளக்கரையை அனைவரும் அடைந்தனர். அரசன் அடிகளை நோக்கி, "சிவ நேயச் செல்வரே! இறைவன் திருவருளால் உம் கண் ஒளிபெறுதலைக் காட்டும்!" என்றான். உடனே தண்டியடிகள் "எல்லாம் வல்ல எந்தை சிவபெருமானே முழு முதற் கடவுள் என்பதும் அடியேன் அவர் அடிமை என்பதும் மெய்யாயின் இம் மன்னவன் முன்னே, என் கண்கள் ஒளி பெறுக! சமணர் கண்கள் ஒளி இழக்க" என்று சொல்லி, அஞ்செழுத்தை ஓதிக் கொண்டே திருக்குளத்தில் முழுகினார். முழுகி எழுந்த போது அவர் கண்கள் ஒளி பெற்றுத் திகழ்ந்தன. சமணர்கள் கண்களை இழந்து தடுமாறினர். அதுகண்ட அரசன் ஏவலர்களை நோக்கி, "தண்டியடிகளிடம் வீண்வாதம் செய்து தோற்ற சமணர்களை திருவாரூரிலிருந்து அகன்று போகும்படி துரத்துங்கள்" என ஆணையிட்டான். ஏவலாளர்கள் சமணர்களை அவ்வாறே துரத்தினர்.

சமணர்கள் கண்கள் காணாமையால் மனங் கலங்கினர். குழியிலே விழுந்தனர். "ஊன்று கோல் கூட இல்லையே!" என ஓலமிட்டார்கள். இதுவே வழி என மயங்கித் தூற்றை அடைந்து துன்புற்றனர். "பொய்ப் பொருளை மெய்ப் பொருள் என நம்பி அழிவுற்றோம்" என அலறினர். பாய்களைத் தவறவிட்டனர். மயிற்பீலிகளை எடுக்கத் தடவிக் காணாது தடுமாறினர். கற்களின் மேல் இடறி விழுந்து கால்களிலும் கைகளிலும் காயம் பட்டனர். மிக நெருங்கித் தம்முள் ஒருவரை ஒருவர் மொட்டைத்தலையில் முட்டி மோதினர்.

சமணர்கள் திருவாரூரிலிருந்து நீங்கிய பின்னர், சோழமன்னன் சமண் பாழிகளையும் பள்ளிகளையும் பறித்து, திருகுளத்துக்குக் கரை கட்டித் திருப்பணி செய்தான். தண்டியடிகளை வணங்கிப் போற்றினான். தண்டியடிகளும் அரன் அருள் நினைந்து, அவன் கழல் வணங்கி, அஞ்செழுத்து ஓதிச் சிவனடி அடைந்தார். தனக்குவமை இல்லாத தலைவனுக்கு அடிமையாகித் தண்ணருள் பெற்ற தண்டியடிகளின் தாட்கமலங்களை வணங்கி வாழ்வாம்.

குறிப்பு: பங்குனித் திங்கள் 25-ஆம் நாள் (8-4-75) செவ்வாய்க்கிழமை தண்டியடிகளின் திருநட்சத்திரம்-சதயம் வருவதை யொட்டி வெளியிடப் பெறுகிறது.

உ

வருக! இராமேஸ்வரம்

இராமேசுவரம் தீவில் அமையப்பெற்றுள்ள அருள்மிகு. இராமநாதசுவாமி திருக்கோயில் மனம் கவரும் புராதன சிற்பக்கலைக் காட்சிகளுடனும், மிகப்பெரிய பிரகாரங்களையும் கொண்டதாக விளங்குகிறது. இராமாயண வரலாற்றுத் தொடர்பு கொண்டுள்ள இத்தலம் பன்னிரு ஜோதிர்லிங்கத் தலங்களுள் ஒன்றாக விளங்குவதுடன், வடக்கே காசியும், தெற்கே இராமேசுவரமும் என இந்துக்களுக்குத் தலைசிறந்த இரு பெரிய புண்ணிய தலங்களாகும்.

இத் திருக்கோயிலில் எல்லா நவீன வசதிகளுடன் கூடிய தங்கும் விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. சேவார்த்திகள் வசதியாகத் தங்கவும், முறையாக வழிபடவும், இங்கு முக்கிய மாகக் கருதப்படும் இலக்குமண தீர்த்தம், தனுஷ்கோடி, கந்தமாதன பர்வதம் முதலான இடங்களுக்குப் போவதற்கு வசதியும் இக்கோயில் நிர்வாக அதிகாரியை அணுகுவதன் மூலம் அடையலாம்.

இக்கோயிலில் ஸ்ரீ இராமநாதசுவாமிக்கும், ஸ்ரீ பர்வத வர்த்தினி அம்பாளுக்கும் நடைபெறும் கோடி அர்ச்சனையில் சகஸ்ரநாமம் ஒன்றுக்கு ரூ. 10/– வீதம் கட்டணம் செலுத்தி அர்ச்சனை செய்து திருவருள் பிரசாதமும், வெள்ளிக் காசும் பெறலாம்.

இக்கோயிலில் நடைபெற்று வரும் மாபெரும் திருப் பணிக்குத் தாராளமாக நன்கொடை வழங்க வேணுமாய் வேண்டப்படுகிறது. இந்த நன்கொடைக்கு வருமானவரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இராமேசுவரம்,
தமிழ்நாடு.

நிர்வாக அதிகாரி
அருள்மிகு. இராமநாதசுவாமி திருக்கோயில்.

குன்றக்குடி
அருள்மிகு ஆறுமுகப்பெருமான்
பாமாலை

மரு. பரமகுரு

தோகையடி விநாயகர் வணக்கம்

(கட்டளைக் கலித்துறை)

கானத் திருப்புகழ்த் தேன்செவி யுண்ட கடவுளிசை
யானும் தமிழால் இயம்ப விழைந்தேன் இரும்புலியின்
தோனச்சிப் பூண்டவன் மைந்தன் மயில்மலைத் தோகையடி
ஞானக் களிற்றின் மலர்த்தாள் நமக்கென்றும் நற்றுணையே.

நூல்

(கட்டளைக் கலித்துறை)

ஒன்றுகண் டேன்தெய்வம் உண்டுகண் டேன்நெஞ் சுருகிநின்றேன்
நன்றுகண் டேன் ஒரு நாளும் மறவேன் நலிவிருளைத்
தின்றெழு ஞாயிற்றைக் குன்றக்குடியில் செழித்தசிவக்
கன்றினைக் கண்டபின் துன்பமுண் டோஅது காத்திடுமே. (1)

ஓங்கும் தனிவே லுடன்மயி லேறி உலகமெல்லாம்
தாங்கும் படிவள்ளி தெய்வானை பாங்கில் தழைத்திருக்கத்
தேங்கடப் பம்புனை தெய்வமோ ராறு திருமுகத்தோ (டு)
ஈங்கிருந் தேஅருள் செய்தது காண்பயம் ஏன் மனமே. (2)

முருகனைக் குன்றக் குடிவளர் ஆறு முகத்தனை, மால்
மருகனை வள்ளிவாய் யாழ்மொழிக் கேங்கிடும் மன்னவனை
ஒருமுறை நீ நினை நெஞ்சமே போதும் உனக்கவனே
அருள்செயும் உன்றன் கருக்குழிப் பாதை அடைபடுமே. (3)

என்றும் இளையவ னைத் தமி ழாக இருப்பவனை
நன்றே யுடையவ னைத்தீதி லானை நம் நாயகனைக்
குன்றக் குடிமலைக் கோனைக் குடிகாக்கும் கொற்றவனை
என்றைக்கு மேமற வாதிருப் பாய்இனி என்மனமே. (4)

வானக்கி யோடும் மதிப்பிஞ்சு சூடுவோன் வானுதற்கண்
தானக்கி னிப்பொறி யாகத் தகித்தெழுந் தண்டமெல்லாம்
தீநக்கத் தோன்றினை ஆறு முகத்துச் செழுங்கருணை
தேனிக்கப் பன்னிரு கண்மலர் பூத்தது தெய்வமிதே. (5)

(தொடரும்)

உ

திருச்சிற்றம்பலம்

திருவருட்பா

(பிள்ளைப்பெரு விண்ணப்பம்)

இரும்புநேர் மனத்தேன் பிழையெலாம் பொறுத்தேன்
இதயத்தில் எழுந்திருந் தருளி
விரும்புமெய்ப் பொருளாம் தன்னியல் எனக்கு
விளங்கிட விளக்கியுட் கலந்தே
கரும்புமுக் கனிபால் அமுதொடு செழுந்தேன்
கலந்தென இனிக்கின்றோய் பொதுவில்
அருப்பெரும் சோதி அப்பனே உளத்தே
அடைத்தருள் என்மொழி இதுவே

—திருவருட்பிரகாச வள்ளலார்

திருச்சிற்றம்பலம்

Edited, Printed at Peravai Achakam and Published by A. Narayanaswamy B. A., for the Tamil Nadu Deivika Peravai at No. 9. Maharaja Surya Rao Road. Alwarpet. Madras-600018